# மாகாணக் கல்வித் திணைக்களம்
## வடக்கு மாகாணம்
## Provincial Department of Education, Northern Province

மாதாந்த மதிப்பீடு

| | | |
|---|---|---|
| தரம் - 9 | தமிழ்மொழியும் இலக்கியமும் | யூலை – 2022 |

**இதயம் அழுகிறது**

அலகு - 04

1-20 வரையான வினாக்களுக்கு மிகவும் பொருத்தமான விடையினைத் தெரிவு செய்க.

1.“ பென்னம் பெரிய பிரம்பாலே .....” என்பதில் பென்னம்பெரிய என்பது

1. இரட்டைமொழி 2. இணைமொழி 3. அடுக்குமொழி 4. அடுக்கிடுக்குமொழி

2.“ பொன்னான கைகளினை புண்ணாக்கு...” இதில் உள்ள அடைமொழி

1. கைகள் 2. புண்கள் 3. பொன்னான 4. யாவும்

3. ஆசிரியர் எதற்காக தாங்க முடியாது தவித்ததாக கூறப்படுகின்றது

1. அடித்ததால் 2. பேசியதால் 3. முரண்பட்டதால் 4. கோபம்

4. கருக் கூட்டும் என்பது

1. தேடல் 2. காணல் 3. பார்த்தல் 4. உருவாகுதல்

5. ஆசிரியர் மாணவர் பற்றிய எவ்விடயத்தில் கண்ணாயிருந்தார்

1. கவனிப்பதில் 2. ஏசுவதில் 3. உயர்த்துவதில் 4. பாதுகாப்பதில்

6. “கரை சேர்தல்” என்பது

1. ஈடேற்றல் 2. பாதுகாத்தல் 3. தள்ளிவைத்தல் 4. கரையில் தள்ளுதல்

7.ஆசிரியர் இலக்கியத்தை எவ்வாறு கற்பிக்கின்றார்

1. வியக்கும்படி 2. சிறந்தமுறையில் 3. அழகாக 4. நயக்கும்படி

8. ஆசிரியர் கற்பிக்கும்போது மாணவன் எவ்வாறு வகுப்பறையில் இருந்தான்

1. சுறுசுறுப்பாக 2. மௌனமாக 3. கலகலப்பாக 4. அலட்சியமாக

kalvi.lk

9. ஆசிரியர் எச்செயலுக்காக தன்னைத்தானே நொந்து கொண்டார்

1. தண்டித்ததற்காக 2. தவறு செய்தமைக்காக
3. கோபப்பட்டதற்காக 4. வருத்தப்பட்டதற்காக

10. மாணவன் வகுப்பிற்கு ஏன் பிந்தி வருகை தந்தான்.

1. வைத்தியசாலைசென்றதால் 2. ஆலயம்சென்றதால்
3. கடைக்குசென்றதால் 4. பிந்தி எழுந்ததால்

11. வகுப்பறையில் வழமைக்கு மாறாக இருந்ததற்கான காரணம்

1. உற்சாகம் 2. களைப்பு 3. சோம்பல் 4. மகிழ்ச்சி

12. "இதயம் அழுகிறது" எனும் கவிதையின் ஆசிரியர் யார்?

1. பெனடிட் பாலன் 2. உதயமூர்த்தி 3. சோமசுந்தரம் 4. அன்புமுகைதீன்

13. ஆசிரியரின் இதயம் எதற்காக அழுததாக கூறப்படுகிறது.

1. தனக்காக 2. மாணவனுக்காக
3. ஆராயாது தீர்ப்புவழங்கியதற்காக 4. தந்தைக்காக

14. ஆசிரியரிடம் மாணவன் மீண்டும் எதனைக்கேட்டான்

1. மன்னிப்பு 2. உதவி 3. பாடத்தை படிக்க 4. பாடத்தை நிறுத்த

15. இம்மாணவனிடம் காணப்பட்ட தனிப்பட்ட பண்பு என்ன

1. கோபம் 2. பொறாமை 3. அன்பு 4. தன்னடக்கம்

16. இவ் ஆசிரியரிடம் நீர் கண்ட பண்பு யாது

1. அன்பு 2. கோபம்
3. மாணவர்நலனில்அக்கறை 4. மாணவரை பழி வாங்கும் எண்ணம்

17. கண்ணனது கருமை என்பது

1. 4ம் வேற்றுமை 2. 5ம் வேற்றுமை 3. 6ம் வேற்றுமை 4. 3ம் வேற்றுமை

18. "அனை" என்பதை குறிக்கும் வேறு ஒரு சொல்

1. அழகு 2. புற்று 3. தாக்கு 4. கட்டுதல்

19. தாமரையினது இதழ்கள் அழகானவை இதில் வேற்றுமை உருபினை ஏற்ற சொல்

1. தாமரை 2. இதழ்கள் 3. அழகு 4. பூ

Education கல்வி

20. நாவலரது வருகை கூட்டத்தவர்க்கு மகிழ்ச்சியை அளித்தது இதில் மகிழ்ச்சி என்பது

1. அன்பு 2. கருணை 3. கோபம் 4. சந்தோசம்

பகுதி 2

பின்வரும் வினாக்களுக்கான சரியான விடையை எழுதுக

1. இதயம் அழுகிறது கவிதை இடம் பெற்ற நூல் எது?
2. இக்கவிதையில் இடம்பெறும் ஆசிரியருள் உயரிய எண்ணம் யாது?
3. ஆசிரியரின் மனதில் ஏற்பட்ட வருத்தம் யாது?
4. வுழமையாக குறித்த மாணவன் வகுப்பறையில் எவ்வாறு இருப்பான்?
5. மதி எனும் சொல் உருபு என்ன?
6. 6ம் வேற்றுமையின் சொல் உருபு என்ன?
7. இவ் வேற்றுமையின் பொருள் யாது ?
8. மதம் கொண்ட யானை பாகனை கொல்லும் இதில் மதம் என்பது ?
9. கிளையின் கண் உள்ளது பழம் இதில் 7ம் வேற்றுமையின் எவ்வகைப் பெயர் இடம் பெற்றுள்ளது?
10. விளியுருவை ஏற்காத பெயர் சொற்கள் எவை?

Education கல்வி அධ්‍යාපන

# தரம் 01 - 10

# 3ம் தவணை

**REVISION | PAPER DISCUSSION**

## ஆரம்பம் - 01.12.2024

மீட்டல் மற்றும் வினாத்தாள்
கலந்துரையாடல் வகுப்புகள்

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும்
இணைந்து கொள்ள முடியும்.

**JOIN NOW**

## புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன..

### கட்டண விபரங்கள்

**தமிழ் Medium**

| | |
|---|---|
| தரம் 01-02 | 2000/= |
| தரம் 03-05 | 2500/= |
| தரம் 06-10 | 3000/= |

**English Medium**

| | |
|---|---|
| தரம் 06-07 | 3500/= |

Education கல்வி අධ්‍යාපන

KALVI.LK

**WHATSAPP**

**075 287 1457**